கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

## வகுப்பு - 8

## சமூக அறிவியல்

**மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)**
கேரளம்.
2022

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரியவந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி சிறுநூல் ஒன்றை உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச்செயல்பாட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் தன்னம்பிக்கையோடு முன்னேறட்டும். வாழ்த்துகள்.

**இயக்குநர்**

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

# அலகு 1
# ஆரம்பகால மனித வாழ்க்கை

## செயல்பாடு 1

வகுப்பு 5 அலகு 2 கல்லிலிருந்து உலோகத்தை நோக்கி

**கற்றல் அடைவு**

■ பழைய கற்காலம், நவீன கற்காலம் போன்றவைகள் ஒப்புமைப் படுத்தப்படுகிறது.

வகுப்பு 8

**அலகு 1 ஆரம்பகால மனித வாழ்க்கை**

**கற்றல் அடைவு**

■ பல்வேறு கற்கால காலகட்டங்கள் ஒப்புமைப்படுத்தப்படுகிறது.


**கருத்துகள்**

- பழைய கற்காலம்
- இடைக் கற்காலம்
- நவீன கற்காலம்
- தாமிரக் கற்காலம்

(i) பல்வேறு கற்காலங்களுடன் தொடர்புடைய படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது எந்தக் கற்காலத்துடன் தொடர்புடையது என்பதைக் கண்டுபிடித்து எழுதுக.



...........a.............



...........b.............



...........c.............

(ii) மாணவர்களைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து வாசிப்புக் குறிப்பு வழங்கப்படுகிறது.

கல், மனிதர்களுடைய வாழ்க்கையில் தாக்கம் செலுத்திய ஒரு முக்கியமான பொருள் ஆகும். ஆரம்ப காலங்களில் ஆயுதங்களாகவும் கருவிகளாகவும் சொரசொரப்பான்ன கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது தொடர்ச்சியாக நுண்ணியதும் கூர்மையானதுமான கல் ஆயுதங்கள் பன்படுத்தப்பட்டன. பின்னர் அதிகக் கூர்மையானதும் பளபளப்பானதுமான ஆயுதங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். பிற்காலத்தில் கல்லால் ஆன ஆயுதங்களுடன் தாமிரத்தினாலும் வெண்கலத்தினாலும் செய்யப்பட்ட ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன.

■ மேலே கொடுக்கப்பட்டுள்ள வாசிப்புக் குறிப்பை வாசித்து அட்டவணையை நிரப்பவும்.

| கற்காலம் | சிறப்பம்சங்கள் |
|---|---|
| • பழைய கற்காலம் | • கரடு முரடான கற்களால் செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்திய காலகட்டம்<br>• ..................................... |
| • ..................................... | • .....................................<br>• ..................................... |
| • ..................................... | • .....................................<br>• ..................................... |
| • ..................................... | • .....................................<br>• ..................................... |

## செயல்பாடு 2

வகுப்பு 6 அலகு 5 பூமி கதையும் காரியமும்

### கற்றல் அடைவு

அட்சக்கோடுகள் - தீர்க்கக்கோடுகள் போன்றவைகளைப் பயன்படுத்தி பூமியில் இடநிர்ணயம் நடத்தப்படுகிறது.

வகுப்பு 8 அலகு 1 ஆரம்பகால மனித வாழ்க்கை

### கற்றல் அடைவு


கற்கால மையங்கள் அட்டவணைப் படுத்தப்படுகிறது.

### தேவையான கருவிகள்

அரசியலமைப்பு நிலப்படம் - இந்தியா


(a) மாணவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்படுகிறார்கள் கற்கால மையங்களோடு தொடர்புடைய நிலப்படங்களை உற்றுநோக்குமாறு கூறவேண்டும். நிலப்படங்களிலிருந்து பல்வேறு கற்கால மையங்களை குழுக்கள் கண்டுபிடிக்கிறது. இந்திய அரசிலமைப்பு நிலப்படத்தை உற்றுநோக்கி இந்தக் கற்கால மையங்கள் தற்போது எந்தெந்த மாநிலங்களில் அமைந்துள்ளன எனக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

| பழைய கற்கால மையங்கள் | மாநிலங்கள் |
|---|---|
| • பிம்பேட்க<br>• நர்மதை சமவெளி<br>• கர்நூல் குகைகள்<br>• ஹன்ஸ்கி | •<br>•<br>•<br>• |




பழைய கற்கால மையங்கள்

| நவீன கற்கால மையங்கள் | மாநிலங்கள் |
|---|---|
| • கோல்திவ<br>• உத்நூர்<br>• பய்யம் பள்ளி<br>• எடக்கல் | •<br>•<br>•<br>• |



நவீன கற்கால மையங்கள்

| தாமிரக் கற்கால மையங்கள் | மாநிலங்கள் |
|---|---|
| • சந்தோளி<br>• அஹார்<br>• காயத<br>• சிராந்து | •<br>•<br>•<br>• |



தாமிரக் கற்கால மையங்கள்

# அலகு 2
# நதிக்கரை நாகரிகங்கள் வாயிலாக

## செயல்பாடு 1

வகுப்பு 5 அலகு 2 கல்லிலிருந்து உலோகத்தை நோக்கி.

**கற்றல் அடைவு**

- உலகிலுள்ள வெண்கலக்கால நாகரிகங்களைப் புரிந்துகொண்டு அவற்றின் சிறப்பியல்புகளை பகுப்பாய்வு செய்தல்.

வகுப்பு 8 அலகு 2 நதிக்கரை நாகரிகங்கள் வாயிலாக

**கற்றல் அடைவு**

- மெசப்பட்டோமியா, எகிப்து, சீனா, சிந்துநதிக்கரை நாகரிகங்களின் முக்கியமான சிறப்புகளையும் அவைகளின் சாதனைகளையும் பகுப்பாய்வு செய்தல்.

**கருத்துகள்**

- சிந்து நதிக்கரை நாகரிகம்
- எகிப்து நாகரிகம்
- மெசப்பட்டோமியா நாகரிகம்
- சீனா நாகரிகம்

■ பல்வேறு நாகரிகங்களின் சிறப்புகளைப் பற்றி எழுதிய குறிப்புச்சீட்டுகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவரும் குறிப்புசீட்டை தேர்ந்தெடுத்து எந்த நாகரிகம் என்பதைப் புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் நான்கு குழுக்களாகப் பிரிகின்றனர். (வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் குறிப்புச்சீட்டைத் தயாரிக்கிறார்)

- யூப்ரடீஸ் டைகிரிஸ் நதிக்கரைகளில் வளர்ச்சி ஏற்பட்டது.
- கியூனிபாம் எழுத்து முறை

- ஹோயாங் ஹோ நதிக்கரையில் வளர்ச்சியடைந்தது
- வெண்கலச் சிற்பங்களை தயாரிப்பதில் சிறப்புற்றிருந்தனர்

- சிந்து நதிக்கரையில் வளர்ச்சியடைந்தது
- சிறப்பான நகரத்திட்டமிடல்

- நைல் நதிக்கரையில் வளர்ச்சியடைந்தது
- பிரமிடுகள்

■ தொடர்ச்சியாக இந்த நாகரிகங்கள் பல்வேறு துறைகளுக்கு வழங்கிய நன்கொடைகள் பற்றி பாடப்புத்தகத்தின் உதவியுடன் அட்டவணைப்படுத்தவும்.

| நாகரிகங்கள் | நன்கொடைகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

## செயல்பாடு 2

(i) பழங்காலக் கேரளத்தில் காணப்பட்ட பிண அடக்க முறைகளுடன் தொடர்புடைய நினைவுச்சின்னங்களின் படங்களைப் புரிந்து கொண்டு குறிப்பிடவும்.






..........a........... ............b............ ..........c............

(ii) இதுபோன்று பிணங்கள் அழிந்துபோகாமல் பாதுகாக்கும் முறை எகிப்திலும் காணப்பட்டது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட பிணங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது.


(iii) எகிப்தில் பிணங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பெரிய பிணவறைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

## செயல்பாடு 3





■ மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்கள் எந்த நாகரிகத்துடன் தொடர்புடையது எனக் கண்டுபிடித்து இந்த நாகரிகத்தின் முக்கியமான சிறப்பம்சங்களை வரைபடத்தில் நிரப்பவும்.




## அலகு 3 - புவியின் ரகசியங்களைத் தேடி

### செயல்பாடு 1

வகுப்பு 7 அலகு 13 இந்தியாவின் வழியாக

**கற்றல் அடைவு**

- காலநிலையிலும் நில அமைப்பிலுள்ள வேற்றுமைகள் மண்வகைகளிலும் தாவரங்களிலும் ஏற்படுத்துகின்ற வேற்றுமைகளைப் பற்றி பகுப்பாய்வு செய்தல்.

வகுப்பு 8 அலகு 2 புவியின் ரகசியங்களைத் தேடி


**கற்றல் அடைவுகள்**

- ஒவ்வொரு புவித் தகடுகளின் சிறப்பியல்புகளையும் அட்டவணைப்படுத்துதல்
- மண் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு அதற்கான செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

**கருத்துகள்**

- புவியின் உள்ளறை
- கற்கள்
- சிதைவு
- மண்ணின் தோற்றம்

■ நாம் வசிக்கின்ற பூமி அற்புதங்களின் கலவையாகும். பூமியின் ஆழம் கூடுவதற்கேற்ப வெப்பமும் அழுத்தமும் அதிகரிக்கிறது. பூமியின் உள்ளறைக்கு தகடுகள் போன்ற அமைப்பு காணப்படுகிறது. பூமியின் ஒவ்வொரு தகட்டிற்கும் அதற்கான சிறப்பியல்புகள் காணப்படுகிறது.



(i) படத்தை உற்று நோக்கி பூமியின் வெவ்வேறு தகடுகள் எவையென எழுதவும்.

(ii) பூமியின் வெவ்வேறு தகடுகளுடன் தொடர்புடைய பிற சிறப்புகளை எழுதி வரைபடத்தை நிரப்பவும்.

- மெல்லிய புவியோடு
- 
- 

- புவியோட்டிற்குக் கீழாகக் காணப்படுகிறது.
- 
- 

- புவியின் மையப்பகுதி
- 
- 

(iii) புவியோடும் புவியுறையின் மேல்பகுதியையும் சேர்த்து கரைமண்டலம் என அழைக்கிறோம். பாறைகள் நிறைந்து காணப்படுவதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது.


■ மணற்கல், பசால்ட், ஸ்லேட், கிரானைட், சுண்ணாம்புக்கல், மார்பிள் போன்றவை பல்வேறு விதமான பாறைகளுக்கு எடுத்துக்காட்டாகும். இவை எந்தெந்த பாறை வகையைச் சேர்ந்தது என்பதைப் புரிந்து கொண்டு அட்டவணைப்படுத்தவும்.

| பாறைகள் | எடுத்துக்காட்டு |
|---|---|
| எரிமலைப் பாறைகள் | |
| வண்டல் பாறைகள் | |
| உருமாறிய பாறைகள் | |

### செயல்பாடு 2

சிதைவடைவதால் பாறைகள் உடைந்தும் உயிரிக்கழிவுகள் சிதைந்து சேர்ந்தும் நீண்ட காலமாக நடக்கும் செயல்பாட்டின் வாயிலாகவே மண் உருவாகிறது. ஓர் அங்குலம் தடிமன் அளவிற்கு மண் உருவாக ஆயிரத்திற்கும் மேலான வருடங்கள் ஆகிறது.

(i) செய்தித் துணுக்கைப் பார்வையிட்டு பயிற்சித்தாளை நிரப்பவும்.



**பயிற்சித்தாள்**

| மண்ணால் செய்யப்பட்ட கருவிகள் | மண் சிதைவிற்கான காரணங்கள் | மண் பாதுகாப்புச் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | |

## செயல்பாடு 3

இயற்கைப் பேரழிவுகள் நமது நாட்டில் அன்றாட நிகழ்ச்சியாக மாறிக்கொண்டிருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திகள் கவனிக்கவும்.

**மாநிலத்தில் கனமழை**

கேரளத்தில் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு

மலையோரப் பகுதிகளில் மண் சறிவு

■ இவை கேரளத்தின் இயற்கைப் பேரழிவுடன் தொடர்புடைய செய்திகளே ஆகும். நாம் இயற்கையைப் பாதுகாப்பதால் மட்டுமே இத்தகைய இயற்கை பேரழிவுகளைத் தவிர்க்க முடியும். இத்தகைய இயற்கை பேரழிவுகளைத் தவிர்ப்பதற்கான உங்களது கருத்துக்களைக் குறிப்பிடவும்.

•
•
•
•

## அலகு 4
## நமது அரசு

### செயல்பாடு 1

வகுப்பு 7 அலகு 10 "நமது அரசியலமைப்பு"

**கற்றல் அடைவு**

■ அரசிலமைப்புச் சட்டத்தின் அடிப்படைச் சிறப்புகள் விளக்கப்படுகிறது.

வகுப்பு 8 அலகு 4 நமது அரசு

**கற்றல் அடைவு**

■ சட்டமியற்றும் பிரிவு, சட்டச்செயலாக்கப் பிரிவு, நீதிநியாயப் பிரிவு போன்றவைகள் அடங்கியதே அரசு என விளக்கப்படுகிறது.

**கருத்துகள்**


- அரசாங்கம்
- சட்டமியற்றுதல் இந்தியாவில்
- சட்டச் செயலாக்கம் இந்தியாவில்
- நீதி நியாயப் பிரிவு

### செயல்பாடு 1






(i) அரசின் மூன்று பிரிவுகளோடு தொடர்புடைய படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மக்களாட்சி நாடுகளிலும் அரசுக்கு இது போன்ற மூன்று பிரிவுகள் காணப்படும். இப்பிரிவுகளோடு தொடர்புடைய சொற்சூரியனை நிரப்பவும்.




## செயல்பாடு 2

■ இந்தியாவின் சட்டமியற்றும் பிரிவின் முக்கியமான பகுதிகளே மக்களவையும் மாநிலங்களவையும் இவைகளின் சிறப்பியல்புகளுடன் தொடர்புடைய அட்டவணையை நிரப்பவும்,




## செயல்பாடு 3

■ பிரதம மந்திரி மற்றும் குடியரசுத் தலைவரின் சில அதிகாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தமான சட்டங்களில் சேர்க்கவும்.

- முப்படைகளின் தலைவராகச் செயல்படுகிறார்.
- மக்களவையின் தலைவராகச் செயல்படுகிறார்.
- மந்திரி சபைக் (காபினட்) கூட்டங்களுக்கு தலைமை வகிக்கிறார்.
- பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறார்.

| பிரதம மந்திரியின் கடமைகள் | குடியரசு தலைவரின் கடமைகள் |
|---|---|
| •<br>• | •<br>• |

**செயல்பாடு 4**

நீதிநியாயப்பிரிவின் அமைப்புடன் தொடர்புடைய வரிசையை நிரப்பவும்.

